**DEPOSITION OF WITNESS**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 51 /2018.** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : . காளிதாஸ் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : . | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் உசிலம்பட்டியில் சலூான் கடை நடத்தி வருகிறேன். எனக்கு அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். சாட்சி பாண்டி இறந்துவிட்டார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்தது. விபத்தில் இறந்துபோன நபர் எனது அப்பா பழனி. நான் எனது கடையில் காலை 10:00 மணியளவில் இருந்தபோது எனக்கு தெரிந்த நண்பர் ஒருவர் சைக்கிளில் சென்ற எனது அப்பாவிற்கு தேனி ரோட்டில் சரஸ்வதி பள்ளிக்கூடம் அருகே விபத்து நடந்ததாக சொன்னதன்பேரில் நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தேன்.

2. அங்கே எனது அப்பா கிழமேல் ரோட்டின் நடுவில் ரோட்டில் அடிபட்டு கிடந்தார். அவருக்கு பின்னந்தலையில் அடிபட்டு இருந்தது. கம்பத்தில் இருந்து மதுரைக்கு வந்த அரசு பேருந்து வேகமாக வந்து ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக ரோட்டை கடந்தபோது அவர் மீது மோதி விபத்துக்குள்ளாகி இருந்தது. பேருந்து அங்கேயே தான் நின்றிருந்தது. நான் ஓட்டுநரை பார்த்தேன். எனது அப்பா சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். அங்கிருந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டு சென்றோம். சம்பவயிடத்தில் கூட்டம் கூடியிருந்தது. அசா.1 ராஜேந்திரன் சம்பவத்தை பார்த்துள்ளார். அவர் தான் புகாரையும் கொடுத்துள்ளார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**3.** எனது வீடு கிழமேல் ரோட்டில் வடக்குபக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது சலூான்கடை ஏடிஎஸ் தியேட்டருக்கு அருகில் கிழமேல் ரோட்டிற்கு தெற்குபக்கம் உள்ளது. எனது கடைக்கு வரவேண்டும் என்றால் கிழமேல் ரோட்டை வடக்கிலிருந்து தெற்காக கடந்து தான் வரவேண்டும் என்றால் சரிதான். நான் சைக்கிளில் என் அப்பா எப்படி வந்தார் என்றோ, பேருந்து எப்படி வந்தது என்றோ நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

S.d./ Kalidass

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.